சிவமயம்



யாழ்ப்பாணம் – தொல்புரம் கிழக்கு

அமரர் திருமதி சிறீகரன் பொன்னம்மா

அவர்களின்

# "பொன்னமுதம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30-03-2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவசக்திமயம்



யாழ்ப்பாணம் – பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும்
தொல்புரம் கிழக்கை வாழ்விடமாகவும் கொண்டவரும்
உயர்சைவ வேளாண்குல மரபில் தோன்றியவருமான

# அமரர் திருமதி சிறீகரன் பொன்னம்மா

அவர்களின்

சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பெற்ற

# "பொன்னமுதம்"

**30-03-2016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"தாயிற்சிறந்த கோயிலுமில்லை
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை"

# சமர்ப்பணம்

மனிதருள் மாணிக்கமாய்
எங்கள் குடும்பத்தின் திருச்சுடராய்
இமைப் பொழுதும் உறங்காது .
அல்லும் பகலும் உழைத்து

வாழும் காலமெல்லாம் வழிகாட்டியாய் இருந்து
எம்மைப் பேணிப் பாதுகாத்து
கல்வியறிவு ஊட்டி நற்பண்புகளுடன் வளர்த்து
அனைவருடனும் அன்பாகப் பேசும் தன்மைகொண்டவராய்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து – இன்று
வானுறையும் தெய்வத்தின் திருவடிகளை
சென்றடைந்த அன்புத் தெய்வத்தின்
பாதக் கமலங்களுக்கு காணிக்கையாக
இம்மலர் சமர்ப்பணம் செய்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



என்றும் உங்கள் நினைவுகளைச் சுமக்கும்
**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னை மடியில்
18-05-1927

இறைவன் அடியில்
29-02-2016

அமரர்.

# திருமதி சிறீகரன் பொன்னம்மா

அவர்கள்

ஜீதி வெண்பா

சீரோங்கு மன்மதவாண்டு மாசித்திங்கள் பதினேழில்
பாரோங்கு தேய்பிறை ஸப்தமி விசாக நாளில் - பேரோங்கு
மண்ணுலகு வாழ்வைவிட்டு பொன்னம்மா நல்லாள்
விண்ணுல கேகினாள் விரைந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பஞ்ச புராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

அங்கமும் வேதமும் ஓதும் நால்வர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதித்தவள் மாடவீதி
மருகனிலாவிய மைந்தர் சொல்லால்
செங்கயரால் புனல் செல்வமல்கும்
சீர்கொள் செங்காட்டின் குடியதனுள்
கல்கும் விளங்கெரி ஏந்தி ஆடும்
கணபதீச்சரம் காமுறவே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கி பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவ பெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலா கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவர் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிர என் கண்கள் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மன்னுகதில்லை வளர்க நம்பக்தர்கள்
வஞ்சகர் போய் அகல
பொன்னின் செய் மண்டபத்தே புகுந்து
புவனி எல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோள்
அடியோருக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்கு பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகி
சோதியாய் உணர்வுமாகி தோன்றிய பொருளுமாகி
பேதியா ஏகமாகி பெண்ணுமாய் ஆணுமாகி
போதியா நிற்கும் தில்லை பொது நடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறைமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வைரவர் துதி

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொளிந்த வானவர்
குருதியும் அகந்தையுங் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அமரர் திருமதி சிறீகரன் பொன்னம்மா அவர்களின் வாழ்க்கை வரலாறு

இயற்கை வனப்புக் கொழிக்கும் ஈழத் திருநாட்டின் தலையெனப் பெரியோர்களால் போற்றப்படும் யாழ்ப்பாணத்து மேற்குப் பகுதியில் இருக்கும் எழில் கொஞ்சும் பண்ணாகம் என்ற ஊரில் அருணாசலம் இராசா வாழ்ந்து வந்தார். அன்னார் அதே ஊரைச் சேர்ந்த இராமசாமி மகள் ஆச்சிப்பிள்ளை என்பவரை வாழ்க்கைத் துணையாகக் கொண்டு இல்லறம் நடத்தி வந்த நல்லறத்தின் பயனாக கனகம்மா, அன்னம்மா, பொன்னம்மா, மாரிமுத்து, சிவப்பிரகாசம், சரஸ்வதி, செல்வநாயகம் ஆகிய மக்கட் செல்வங்களோடும் செல்வாக்கோடும் வாழ்ந்து வந்தார். மக்களுக்குச் செய்யவேண்டிய சமூக, சமய, பண்பாட்டுக் கடமைகளைத் தவறாது செய்து மகிழ்ந்தார். எல்லாப் பிள்ளைகளையும் குறைவின்றி படிக்க வசதிகள் செய்து கொடுத்தார்.

இராசா - ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் மூன்றாவது பெண் குழந்தையாகவும் இன்று இக்கதையின் கதாநாயகியாகவும் ஆன அமரர் சிறீகரன் பொன்னம்மா அவர்கள் ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தேழாம் ஆண்டு வைகாசி மாதம் பதினெட்டாம் திகதி இப்பூவுலகில் பிறந்தார்.

இரண்டு அக்காமாரின், இரண்டு தம்பிமாரின்; இரண்டு தங்கைமாரின் மத்தியில் மிகவும் செல்லமாக வாழ்ந்து வந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி கற்கும் பருவம் வந்தவுடன் தந்தையார் யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் கல்வியைத் தொடக்கி வைத்தார். பாடசாலையிலேயே மிகவும் கெட்டிக்காரி எனப் பெயரெடுத்தார்.

பின்னர் திருமணப் பருவம் வந்துவிட்டதெனக் கருதிய பெற்றோர் அவருக்கு அவரின் உறவினரான தொல்புரத்தைச் சேர்ந்த தம்பிமுத்து சின்னம்மா தம்பதியினரின் ஏகபுத்திரனான Colombo, Indian Overseas Bank இல் கடமையாற்றிய சிறீகரன் என்பவரை 1955ஆம் ஆண்டு ஆனி மாதம் 22ஆம் திகதி அன்று மணம்முடித்து வைத்தனர்.

இவர்களின் இல்வாழ்வின் பயனாக மங்காச் செல்வம் எனப் போற்றப்படும் மக்கட் செல்வங்களாக தனேந்திரன், கேசவன், நாகராஜன், குகநேசன், கிரிஜா என ஐந்து செல்வங்களைக் கண்டு மகிழ்ந்தனர். இவர்களில் மூத்த இரு ஆண் குழந்தைகளும் குழந்தைப் பருவத்திலேயே இறைவனடி சேர்ந்தனர். பிள்ளைகளை முறைப்படி கல்வி கற்பித்து உரிய பருவத்தில் மணம் முடித்துக் கொடுத்தனர்.

மூத்தமகன் நாகராஜனுக்கு தனது ஒன்றுவிட்ட சகோதரனான சிவப்பிரகாசம் ஞானசிரோன்மணி தம்பதிகளின் மூத்த புதல்வியான ஞானதர்சினியை மணம் முடித்துக் கொடுத்து சறூஜன், சிபிலன், கிஷான் என்னும் பேரக் குழந்தைகளைக் கண்டு மகிழ்ந்தார். இளையமகன் குகநேசனுக்கு தனது சொந்தத் தம்பியான செல்வநாயகம் இராஜேஸ்வரி தம்பதிகளின் மூத்தமகள் நிறஞ்சலாவை மணம் முடித்துக் கொடுத்து தக்ஷி, டனிஷி என்னும் பேரக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளைக் கண்டு மகிழ்ந்தார். இரு மகன்மாரும் தமது குடும்பத்தாருடன் கனடா நாட்டில் வாழ்ந்து வருகிறார்கள். தனது ஒரே மகள் கிரிஜாவிற்கு அராலி மேற்கைச் சேர்ந்த திருநாவுக்கரசு இராஜேஸ்வரிஅம்மா தம்பதியினரின் இளைய மகன் சிவயோகலிங்கத்தை மணம் முடித்துக் கொடுத்துத் துஷாணி என்னும் பேரக்குழந்தையைக் கண்டு மகிழ்ந்தார்.

அன்னார் செல்வச் செழிப்போடும் மிகுந்த மகிழ்ச்சியோடும் வாழ்ந்து வந்தார். அவர் 2005ஆம் ஆண்டு தமது ஐம்பதாவது ஆண்டு திருமண நிறைவு நாளையும் 2015ஆம் ஆண்டு தமது அறுபதாவது ஆண்டு திருமண நிறைவுநாளையும் கொண்டாடி மகிழ்ந்திருந்தார். இவர் சில வருடகாலம் கால் நடக்க முடியாத நிலையில் வாழ்ந்து இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டு மாசி மாதம் இருபத்தொன்பதாம் திகதி மாலை 3.30 மணியளவில் இவ்வுலக வாழ்வை நீக்கி இறையடி சேர்ந்தார். அவரது ஆத்மா வழக்கம்பரை முத்துமாரியம்மன் பாதத்தில் சாந்தியடைவதாக.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது மனதுக்கினியவள்

இணைத்ததும் தெய்வம் நிறைவான வாழ்வு தந்ததும் அறுபத்தொரு ஆண்டுகள் அருகிருத்தியதும் அவனே.

தாய்க்குப் பின் தாரம் என்றார்கள். நான் அதனை எள்ளளவும் பொய்யுமில்லாது கண்டேன். வாழ்ந்தோம். பெற்றோம். மகிழ்ந்தோம். இன்பத்திலும் துன்பத்திலும் வாழ்ந்த நாட்கள் போதுமன்றோ நீவிர் சொர்க்கத்திலிருந்து வாழ்த்தி நின்கின்றீர்.

கண்கள் மறைந்தாலும் கனவுகள் வளர்கின்றன. இறைவன் எண்ணப்படியே **"வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்"** என எண்ணி மிகுதிக் காலங்களை எங்கள் எச்ச உறவுகளுடன் களிப்போம்.

*ஓம் சாந்தி!*

**நாயகியை மறவா நாயகன்**

**இறைவனுக்கு விருப்பமானது....**

**வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ**
**வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ?**
**வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல**
**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.**

*- விபுலாநந்த அடிகள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் புலம்பல்

ஆசை அம்மாவே அன்பின் திருவுருவே
நேசக் கமலத்தால் எமை நேசித்த பெரியவரே
ஓசைப்படாது எமை விட்டுச் சென்றீரோ
பாசப் பிணைப்பால் நாம் கலங்கி அழலாமோ.

அன்போடு எமைப்பேணி அருகிருந்து கதைகூறி
இன்பவழி எல்லாம் நாம் நாட உழைத்தாயம்மா
எம் சிறப்பைக் காணவென்றே என்றும் ஓயாமல்
பல நலமும் நாம் பெற காரணமாய் நின்றவரே.

எமைவிட்டு ஏன் மறைந்தீர் ஏங்குகின்றோம் நாம் இன்று
இன்னும் பலகாலம் வாழவேண்டும் என்றே நாம்
எதிர்பார்த்த எண்ணமெல்லாம் கனவாகிப் போனதம்மா
ஏன் மறைந்தீர் எமைவிட்டு எம்மனமே பொறுக்கவில்லை.

## மருமக்கள் புலம்பல்

அன்பின் திருவுருவே அறிவின் இருப்பிடமே
ஆனந்தமாய் வாழ அருகிருந்து கதைத்தவரே
மாமி என்றின்றி பெற்ற தாய் போல எம்மை
பேணி அன்பு தந்து பெருவழிகள் காட்டினீரே.

துன்பத்தால் நாமெல்லாம் துவண்டுவிழும் வேளை
துயரங்கள் தீர்த்து எமக்குத் தூயவழி காட்டியவர்
இன்று அருகிலில்லை, ஐயோ - இதுதான் விதியோ
அன்புள்ள மாமியை எப்போது காண்போமோ.

மருமக்கள் என்றெம்மை மறுபார்வை பார்த்ததில்லை
பெற்ற பிள்ளை போல பல நற்கருமம் செய்தீரே
உற்றார் உறவினரொடு உடன்நின்று நாம் வாட
சென்றதேனோ எமைவிட்டு சொல்லாது - தவிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

அப்பம்மா, அம்மம்மா என்றவுடன்
பல கதைகள் சொன்னீரே
பண்பு, அன்பு இவை எல்லாம்
என்ன வென்று கற்பித்தீர்
மழலை மொழி பேச
மகிழ்ந்து இருந்து சிரித்திடுவீர்
அழுதவுடன் பாலூட்டி
அருமையாய் நீராட்டி
அருகிருந்து நாம் வாழ
ஐயோ வழியில்லை
உறவென்று இனி நாம்
பாட்டியை எங்கு காண்போம்
மூத்ததொரு தெய்வம்
என்று முழுதும் மகிழ்ந்திருந்தோம்
யாரை இனி நாம் சென்று
பாட்டி என்று அழைத்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்றியில் குங்குமம் நிலைத்திட வாழ்ந்த உத்தமியே பொன்னம்மா

*நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்*
*பெருமை உடைத்திவ் உலகு* - பொய்யாமொழி ஆகும்.

இல்லறமானது நல்லறமாகும் என்ற வள்ளுவன் வாக்கிற்கு இணங்க வாழ்வாங்கு வாழ்ந்தவர் மாதர்களுக்கெலாம் அரசியாகத் திகழ்ந்தவர்தான் அமரர் திருமதி சிறீகரன் பொன்னம்மா என்றால் மிகையாகாது.

இராசா ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வியாக 18.05.1927ல் மலேசியாவில் பிறந்தார். சிறு வயதிலேயே இலங்கையை வந்தடைந்தார். தன் ஆரம்பக்கல்வியை யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் கற்றுக்கொண்டார்.

செந்நெல் விளையும் களனி நிலங்களையும் முக்கனிகள் விளையும் பூமியாகவும் தொன்மையான பல இன மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்தும் வசித்தும் வந்த வலி-மேற்கு பிரதேசத்திே தன்னிறைவு பெற்ற கிராமமாக தொல்புரம் கிழக்கு கல்வி, கலை, கலாசாரப் பண்பாடுகளுடன் விவசாயம், வர்த்தகம், கல்வியின் மேன்மைகளையும் பெற்றுப் பல்துறை வர்த்தகர்களையும் ஈட்டிய பெருமை தொல்புரம் கிழக்கிற்கே உரிய சொத்தாகும். தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் தனக்கே ஓரிடத்தைப் பிடிப்பது சாலவும் பொருந்தும். தம்பிமுத்து சிறீகரன் அவர்கள் தனக்கெனத் திறமையான கொள்கை, நிதானம், நற்பண்புகளுடன் விளங்கித் தனது ஆரம்பக் கல்வியை யா/பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாசாலையிலும் பின்பு யா/விக்டோரியாக் கல்லூரியிலும் கல்விகற்று Matriculation பரீட்சையைச் சித்தியடைந்து Colombo, Indian Overseas Bank இல் கடமையாற்றினார். உயர் பதவிகளைத் திறம்படச் செய்து இல்லத்தரசியாக, உற்றார் உறவினர் போற்றவும் இராசா ஆச்சிப்பிள்ளையின் மகளாகிய பொன்னம்மா அவர்களை பெரியோர் ஆசீர்வாதத்துடன் 22.06.1955 இல் திருமணம் செய்தார். இல்வாழ்க்கை இனிதே ஓடியது. இருவரும் ஒருமித்து செயற்பட்டனர். தனேந்திரன், கேசவன் ஆகிய இரு மகன்மாரும் சிறுவயதிலேயே சிவபதமடைந்தனர். பிள்ளைகளான நாகராஜன் ஞானதர்சினியையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகனேசன் நிறஞ்சலாவையும் மகள் கிரிஜா Chemistry ஆசிரியர் சிவயோகலிங்கம் அவர்களையும் திருமணம் செய்து இன்புற்றிருக்கும் வேளையிலே சாருஜன், சிபிலன், கிஷான் நாகராஜன் தம்பதிகளுக்குக் Canadaவிலும் குகனேசன் தம்பதிகளுக்கு தக்ஷி, டனிஷியும் சிவயோகலிங்கம் கிரிஜா தம்பதிகளுக்கு துஷானியும் பிறந்து பேரப்பிள்ளைகளுடன் மகிழ்ந்து வாழ்ந்த காலங்களை பொன் எழுத்துக்களாகப் பதிக்கலாம்.

கணவனே கண்கண்ட தெய்வமாக பழகிய பொன்னம்மா, உற்றார், உறவினர், நண்பர்களுக்கெல்லாம் மந்திரியாகப் புத்திமதிகளைக் கூறுவார். தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தின் பொருளாளரும், தற்போதைய உப-தலைவர் பதவிகளையெல்லாம் பல ஆண்டுகள் கடமை ஆற்றினார். தொல்புரம் துரையன் வளவுப் பிள்ளையார் ஆலயம், தொல்புரம் மடத்தடிப் பிள்ளையார், சுப்பிரமணியசுவாமி கோயிலிலும் பலவிதமான பதவிகளை வகித்து வந்தார். இவையெல்லாம் திறம்படச் செயற்படுவதற்கு வழிவகுத்தவர்தான் பாரியார் சிறீகரன் பொன்னம்மா என்றால் மிகையாகாது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் பாதங்களை இறைஞ்சுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

ஆக்கியோன்

**"சமூகஜோதி" தி. வேலுப்பிள்ளை** J. P.

தொல்புரம் கிழக்கு

சுழிபுரம்

19.03.2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மையான குடும்பப் பெண் பொன்னம்மா அம்மையார்!

திருமதி. சிறீகரன் பொன்னம்மா அவர்கள் சிறந்ததொரு குடும்பப் பெண்ணாக வாழ்ந்து காட்டியவர். பண்ணாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தொல்புரம் கிழக்கில் வசிப்பிடமாகக் கொண்டு நல்லதொரு வாழ்க்கை முறையை வாழ்ந்து காட்டியவர்.

இவருடைய கணவர் திரு. தம்பிமுத்து சிறீகரன் அவர்களது வளர்ச்சியில் முழுப்பங்கு இவருக்கு உண்டு. இவர் தொல்புரம் - வழக்கம்பரை முத்துமாரியம்மன் மீது பக்தி கொண்டு பரிபாலனசபையை உருவாக்கி, அதன் வளர்ச்சியில் பங்கெடுத்து, தேவஸ்தான திருப்பணிகளில் ஈடுபட்டு மனத்திருப்தியுடன் வாழ்ந்து வருகின்றார். இவை யாவற்றையும் இனிதே செய்ய மனையாள் வாய்க்க வேண்டும். அந்த வகையிலே திரு. த. சிறீதரன் அவர்களால் இவற்றைச் செய்ய முடிந்தது. அதேவேளை தொல்புரம் கிழக்கு வின்னேஸ்வரா சனசமூக நிலையத்திலும் ஆயுட்கால உறுப்பினராகவிருந்து பல நற்பணிகளைச் செய்தவர். எமது பிரேத வண்டில் பொறுப்பாளர்களில் ஒருவராகவும், கணக்காய்வாளராகவும் சிறப்புடன் செயற்பட்டவர்.

திருமதி. சி. பொன்னம்மா அவர்கள் தனது பிள்ளைகள் மூவரையும் முறைப்படி கல்வி கற்பித்து மணம் முடித்துக்கொடுத்து மருமக்கள் பேரப்பிள்ளைகள் கண்டு மனம் மகிழ்ந்து வந்தவர். அத்துடன் செல்வம் கொழிக்க வாழ்ந்தவர்.

இவர் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டு இருந்தாலும் திடீரென மரணமெய்தியது கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள் ஆகியோருக்கு பெரும் இழப்பேயாகும்.

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ என்ற நியதிக்கு அமைய மனதைக் குடும்பத்தினர் தேற்றுவார்களாக.

ஆத்மா எல்லாம்வல்ல அம்பாளின் பாதாரவிந்தங்களைச் சேரும் என்பதில் நம்பிக்கை உண்டு.

***ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!***

**தி. உதயசூரியன்**
சமாதான நீதவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

## ஔவையார் அருளிச்செய்த

# விநாயகர் அகவல்

சீத்தபவளச் செந்தா மரைப்பூம்
பாதச்சிலம்பு பலவிசைப்பாடப்
பொன்னரைஞாணும் பூந்துகிலாடையும்
வண்ணமருங்கில் வளர்ந்தழகெறிப்பப்
பேழைவயிறும் பெரும்பாரக்கோடும்
வேழமுகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குசபாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியுந்
திரண்ட முப்புரி நூல் திகழொளிமார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதநின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூஷிக வாகன
இப்பொழுதென்னை யாட்கொளவேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்கமறுத்துத்
திருந்திய முதலைந் தெழுந்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென்னுள்ளந்தனிற் புகுந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டாவுபதேசம் புகட்டி யென்செவியில்
தெவிட்டாத ஞான தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னையடக்குமுபாயம்
இன்புறுகருணையின் இனிதெனக்கருளி
கருவிகளொடுங்குங் கருத்தினையறிவித்
திருவினைதன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக்கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரையறுத்தே
இடைபிங்கலையின் எழுத்தறிவித்து
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணிகள்
நான்றெழுபாம்பி னாவினாலுணர்த்திக்
குண்டலியதனிற் கூடியவசபை
விண்டெழு மந்திரம் வெளிப்படவுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலாலெழுப்புங் கருத்தறிவித்தே
அமுதநிலையும் ஆதித்தனியக்கமும்
குமுதசகாயன் குணத்தையுங்கூறி
இடைச்சக்கரத்தின்ஈரெட்டு நிலையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்குமமும்
எண்முகமாக இனிதெனக்கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசெனப்படுத்தி
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமும் இல்லாமனோலயந்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்
திருள் வெளியிரண்டுக் கொன்றிடமென்ன
அடருமானந்தத் தழுத்தி யென்செவியில்
எல்லையில்லா ஆனந்தமளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தினுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருடன்னை
நெஞ்சக் கருத்தி னிலையறிவித்து
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை

# வழக்கம்பரை மாரியம்மன் திருவூஞ்சல்

## காப்பு

இராகம் : **பைரவி**

சீர்மேவுந் தொல்புரத்துத் திகழ்ந்து மேவுஞ்
செய்யவளஞ் செறிவழக்கம் பரையில் வாழும்
ஏர்மேவும் மகாமாரி யம்மை மீதே
இசைபூத்த செந்தமிழா லூஞ்ச லோதத்
தார்மேவுஞ் சடைமவுலி யரனார் தந்த
தனிமகவாம் பெருமுதன்மை சார நின்ற
கார்மேவுங் கரிமுகவன் றனது பாதங்
கரம்பூத்த மலர்கொண்டே கருதி வாழ்வோம்.

## ஊஞ்சற் சிறப்பு

பூவாரு நீலமணித் தம்ப நாட்டிப்
பொலியுமொளிர் வச்சிரத்தால் விட்டமாட்டிக்
காவாரு பதுமணிக் கயிறு பூட்டிக்
கருதரிய பவளமணிப் பலகை கூட்டி
மாவாரஞ் செய்தருளு மூஞ்சல் மீது
மலர்மகளுங் கலைமகளும் வடந்தொட் டாட்ட
நாவாரும் வயல்வழக்கம் பரையில் வாழு
நாயகியே மாரியம்மே யாடீ ரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புர்வோற்பத்திச் சிறப்பு

முந்தொருநா ளுமையவளுந் தவத்தை யாற்ற
முனியெனச் சென் றரனவடன் முத்தை யீர்ப்ப
எந்தைசிறு விரலிலெழு முத்துத் தோற்ற
இயலான்போற் சீதளா யென்றே கூவ
வந்தருளிக் கன்னனூர் மாரி யாகி
வளமைசெறி வையகத்தார் வழிபட் டேத்த
நந்துதவழ் வயல்வழக்கம் பரையில் வாழு
நாயகியே மாரியம்மே யாடீ ரூஞ்சல்.

## வாஞ்சியச் சிறப்பு

கொம்பினொடு துடிமுரசு முழவ மேங்கக்
கொடி குடைக ளாலவட்டங் குழுமி யோங்கத்
தும்புருநா ரதர்வேத கீதம் பாடத்
தொண்டரக மகிழ்ந்துசுக வாழ்வு கூட
வம்பவிழு மலர்மாரி யமரர்பெய்ய
வரமுனிவ ரடிபரவி யாசி செய்ய
நம்புவயல் சூழ்வழக்கம் பரையில் வாழு
நாயகியே மாரியம்மே யாடீ ரூஞ்சல்.

## வழிபாட்டுச் சிறப்பு

உவகையொடு மலரயன்மால் கரங்கள் கூப்ப
ஓசைமணி வாயிலட்ட பாலர் காப்பத்
தவமுடையோர் தூபமுடன் றீபங் காட்டத்
தாழ்ந்துகண நாதர்புகழ் மாலை சூட்டக்
கவிகை யொடு கொடிநிரைகள் வானந்தூர்ப்பக்
காரணியென் றடியர்பல ரழுதே யார்ப்ப
நவையொழிசீர் வயல்வழக்கம் பரையில் வாழு
நாயகியே மாரியம்மே யாடீ ரூஞ்சல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபசாரச் சிறப்பு

அன்னநடை யயிராணி கவிகை வாங்க
அம்பைநிகர் விழியரம்பை களாசி தாங்க
வன்னமுலை யுருவசிவெண் சவரி வீச
விரிவிழியாள் திலோத்தமைவண் சிவிறிதூர்ப்ப
மின்னிடைசேர் மேனகைநல் லடைக்காய் நல்க
வியந்துபல நடமாதர் புகழ்ந்தே யாட
நன்னெல்செறி வயல்வழக்கம் பரையில் வாழு
நாயகியே மாரியம்மே யாடீ ரூஞ்சல்.

## ஆபரணச் சிறப்பு

கோலமுறு வயிரமணிச் சுட்டியாடக்
குலவுமெழின் மாணிக்கத் தோடு மாட
வாலியமுத் தாரமொடு மதாணி யாட
வயங்குவளை தொடியுடனே யகங்கை யாடச்
சாலவொளிர் பாடகமுஞ் சிலம்பு மாடத்
தண்டையொடு பாதசரந் தயங்கி யாட
ஞாலமெலாம் புகழ்வழக்கம் பரையில் வாழு
நாயகியே மாரியம்மே யாடீ ரூஞ்சல்.

## நடனச் சிறப்பு

முந்துதவ மாதர்துதி முழக்கி யாட
முகமனொடு புனன்மாதர் முன்னின் றாட
வந்தனையோ டுரகமட மாத ராட
வரையிலுறை மாதரடி வழிபட் டாடக்
கந்தருவ மாதரிசை காட்டி யாடக்
கருதரிய புவிமாதர் களிகொண் டாட
நந்துதவழ் வயல்வழக்கம் பரையில் வாழு
நாயகியே மாரியம்மே யாடீ ரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாமச் சிறப்பு

ஆரணியே யம்பிகையே யாடீ ரூஞ்சல்
அந்தரியே யாமளையே யாடீ ரூஞ்சல்
பூரணியே புராதனியே யாடீ ரூஞ்சல்
புங்கவியே புராந்தகியே யாடீ ரூஞ்சல்
காரணியே நாரணியே யாடீ ரூஞ்சல்
கருதரிய பலவுயிர்க்குங் காட்சி யாக
நாரநிறை வயல்வழக்கம் பறையில் வாழு
நாயகியே மாரியம்மே யாடீ ரூஞ்சல்.

## போற்றிச் சிறப்பு

கனியொழுகு மாரமுதே தேனே போற்றி
கருதுமற பெண்ணான்குங் காத்தாய் போற்றி
தனிமுதலாம் பரமனிடத் தவளே போற்றி
தையல்முத்து மாரியென்னுந் தாயே போற்றி
இனிமைமிகு மீஸ்வரியே யிறைவி போற்றி
இசைபுலமை யீந்தேயென் னிதய மேவி
நனிவளஞ்சேர் வயல்வழக்கம் பறையில் வாழு
நாயகியே மாரியம்மே யாடீ ரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி

ஆவாழி மறைவாழ் மறையோர் வாழி
அரசரெழில் வணிகர்வே ளாளர் வாழி
மாவாழு முகில்வாழி முனிவர் வாழி
மனுநீதி யுலகமெலாம் மலிந்து வாழி
சீர்வாழுஞ் சித்தாந்த சைவம் வாழி
சிவனடியார் பூதிமணி யெழுத்தும் வாழி
தார்வாழு மம்மைதிரு வருளும் வாழி
தகைமைசேர் வயல்வழக்கம் பரையும் வாழி.

## எச்சரிக்கை

இராகம் : **கண்டா**

திருவார் தொல்புரநகரிலுறைதேவீ எச்சரிக்கை
திகழும்வயல்வழக்கம்பரையாவீ எச்சரிக்கை

பக்தர்தொழுமாரீசிவபரையே எச்சரிக்கை
பரமன்றிருத்தேவியென்னும்வீரீ எச்சரிக்கை

நன்னெல்வயல்வழக்கம்பரைநாரீ எச்சரிக்கை
நளினமலராசிதொழுநங்காய் எச்சரிக்கை

கன்னன் புரவாசிகௌமாரி எச்சரிக்கை
கந்தன்றனைத்தந்தாய்கல்யாணீ எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரீக்கை

இராகம் : **சாவேரி**

சீரார்புகழ்வழக்கம்பரைத்தேவீ எச்சரீக்கை
சிறப்பாயுயிர்செறிந்தேயருள் ஆவீஎச்சரீக்கை

காரார் குழற்கௌரீகௌமாரீஎச்சரீக்கை
கற்றோர் புகழ்வீரியலங்காரீஎச்சரீக்கை

பச்சைப்படிவத்தீபராசத்தீஎச்சரீக்கை
பாவிக்கருள்புரிவாய்பரமேட்டீஎச்சரீக்கை

ஆனித்திருவுலாவில் வருமம்மே எச்சரீக்கை
அடியார் வினையகலவருமமலைஎச்சரீக்கை

## எச்சரீக்கையும் - பராக்கும்

இவை ஷெ உபாத்தியயரது மாதுருவழியில் பாட்டனா ராகிய ஸ்ரீ அ. வேலாயுதச்சட்டம்பியார் முன்செய்தது.

திருவார் தருமிமையாசலமலைமேல்வள ருமையே
சிறிமாமுத்துமாரீயென்னுந்தேவீ எச்சரீக்கை
முருகார்மலர்மகள்நாமகள்முதலாமரமகளீர்
முறையாயடிவணங்குமுத்துமாரீஎச்சரீக்கை
தளக்கும்புகழுழக்கும்வயல்வழக்கம்பரையுறையும்
தையல்முத்துமாரியென்னுந்தாயேஎச்சரீக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கு

இராகம் : **பந்துவராளி**

முச்சகமும்போற்றுமுத்துமாரீஇபராக்கு
மூவுலகையாளும்முத்துமாரீஇபராக்கு
இச்சமும்பரவுமுத்துமாரீஇபராக்கு
இமயமலையரசன்பெற்றகுமரீஇபரக்கு

## பராக்கு

இராகம் : **பந்துவராளி**

உலகுபுகழ்வழக்கம்பரையுறைவாய்பராக்கு
உத்தமர்களுளத்திலருள்நிறைவாய்பராக்கு
பல்கலையுமேத்தும்பராபரையேபராக்கு
பணிந்தவருக்கருளடித்தாமரையேபராக்கு
கச்சைக்கிழித்தெழுந்தகனதனத்தீபராக்கு
கரியையடர்த்திடுமரிவாகனத்தீபராக்கு.

## லாலீ

இராகம் : **பூரணசந்திரிகை**

திருவாணியுங்கவரிபோடத்தேவமாதராடத்
திகழுங்கந்திருவர்பாடச்செழித்தருளுந்தேவி லாலி லாலி

வருமலர்கள்சூடிவளர்மாரியேகௌமாரி
வானவர்கள்வணங்கிப்போற்றமகிழ்ந்தளுதாரி லாலி லாலி

கன்னல்வயல்வழக்கம்பரைகாரணிபுராணி
காசினியோர்வினைதீர்த்துக்கருணைசெய்கல்யாணி
லாலி லாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாலி

இராகம் : **ஸ்ரீராகம்**

லாலிலாலி லாலி லாலிலாலி - லாலி
லாலிலாலி லாலி லாலிலாலி

மாரிலாலி கௌமாரிலாலி - மக
மாரிலாலி முத்துமாரிலாலி லாலிலாலி.
ஆனிமாதத் திரு நாள்விழாவில் - உயர்
தேரில்வந்து எமையாளுமம்மே லாலிலாலி
நந்நெல் வயல் வழக் கம்பரையில் - மேவி
இந்நிலத்தோர்க் கருள் செய்யுமாரி லாலிலாலி
எத்திசையும் புகழ் சத்திமுத்தி நிதம்
பத்திசெய்தே னருள் புத்திதாரும் லாலிலாலி

## மங்களம்

இராகம் : **ஆனந்தபைரவி**

மங்களம்மங்களம்பாட்டைநானுரைக்கவே
வாக்கில்வந்துமாரியம்மேகாத்துமுன்நிற்பவே
சங்குநெறி வயல்வழக்கம் பரையில்வந்தாயே
சரமசரமானவுயிர் தந்தருளுமாயே - மங்.
சிங்கவாகனத்திலேறுஞ்சீதளையேதேவி
செங்கரகம் வாளுடுக்கை செய்யபையபாணீ.
ஆரணியே பூரணியே யாமளையே யம்மே
அடியவர்கள் வினையகற்றி யாளுமுத்து மாரீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பற்பாட்டு

இராகம்: **புன்னாகவராளி**

கொங்குலவுமலர்வாவி
குளிர்ந்திலங்குந்தொல் புரத்துச்
சங்கெ செறிவயல்வழக்கம்
பரையதனிலருள் பொழியு
மிங்கிதமார் மாரிதன்மே
லினியகப்பலேற்றியிங்கே
மங்கலமார் மகிமையுடன்
வந்திறங்குஞ்சரக்குவகை.

குங்குமம்பூமிளகுகராம்புசாதிக்காய்
கோரோசனைபுனுகுபன்னீர்கதம்பம்
கொச்சிமஞ்சலாம்பிச்சைவேர்வகையுடனே
வங்காளமஞ்சலுமதிமதுர சோட்டம்
மட்டிப்பால்சாம்பிராணிகட்டிக்கற்பூரம்
மடமஞ்சல்சடமஞ்சல்செம்மஞ்சலிஞ்சி
மணமுள்ளபூராக்கிழங்குதற்கோலம்

வயிரக்கட்டி குங்குமத்திருநாமக்கட்டி
கோதம்பைகடலைபனைவெல்லஞ்சீனி
கோதையுடன்கஸ்தூரியீரப்பலாக்கொட்டை
வெண்கலந்தானமாப்பித்தளைதிராபம்
வெள்ளிப்பூங்கட்டி வெள்ளிவஸ்திரக்கட்டி
பொன்னுடுன்தங்கமமேலானமதுரம்
பூவந்திக்கட்டி நேர்வாளமுப்பு
பொன்னரிதாரங்கிருஷ்ணாசலப்பட்டை
புலித்தோலுமாகாசக்கருடக்கிழங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரக்குநெல் பாக்குடன் சாதி லிங்கக்குக்கில்
கொம்புடன் தந்தமுங்கோட்டமயமீயம்
எங்கெங்குந்தீவாரந்தரத்திலுண்டான
குங்குமப்பூக்கஸ்தூரிகோரோசனைகள்
குமுகுமென்றுவாசிக்கும் பச்சைக்கற்பூரம்
சந்தனத்தயிலங்கள்சாதிக்காயத்தர்
சலசலென்றுவாசிக்குஞ்சால் வையுறு மால்கள்
கட்டிக்கற்பூரங்குட்டிக்குங்குலியம்
செத்தவரைப்பிழைப்பிக்குஞ்சீவிமருந்து
வெட்டுண்டகாயங்களொட்டநல்லமருந்து
வாழாதபெண்களுக்குவாழ்வுதருமருந்து
மைந்தரில்லாமலடிக்கு பிள்ளைதருமருந்து
கூடாதவாணும்பெண்ணுங்கூட்டிவைக்குமருந்து
தேசாந்திரஞ்சென்றுதிசை கெட்டபேரைச்
சீக்கிரமாய்க் கொண்டுவந்து சேர்க்குநல்மருந்து
இந்தவகையான பலமருந்துகளுமாக
அரக்குமுதலானபலசரக்குகளுமேற்றி
அஞ்சாதசிங்கக்கொடிகட்டிக்கொண்டு
மாமாரிமகமாரிகௌமாரியருளால்
மகிமைபெறுகப்பல்மிகுசிந்தாத்திரையாக
வந்துதடாகரைதனிலே
ஆகா! கரைதனிலே வந்துடா
ஆடிக்கோ பாடிக்கோ தேடிக்கோ சுகங்கூடிக்கோ.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன்துணை

# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு

*துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்*
*பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்(து) தோங்கும்*
*நிஷ்டையுங் கைகூடும் நிமலன ருள்கந்தர்*
*சஷ்டி கவசந் தனை.*

### குறள் வெண்பா

*அமரரிடர் தீர அமரம் புரிந்த*
*குமரனடி நெஞ்சே குறி.*

### நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாடிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்ங்களும்
என்பெயர் சொல்ல இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தர்களெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்ற பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலையங் சூன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாக
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகாழொழி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காம மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் சூழலாள் கலைமகள் நன்றாய்
என்நாவிருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் நாடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் னிரசக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கத் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உவந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் ருளுவர்
மாற்றவ ரெல்லாம் வந்து வணங்குவார்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினிலிருக்கம்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கௌரி காப்பு

## விநாயகர் துதி

*முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு*
*என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்*
*சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்*
*எக்குற்றமும் வாராமற் கா.*

## வேண்டுதற் கூற்று

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்

பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்துவந்தேன்

காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே

அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்

சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையாற்றுப் படலமிதை வழி வழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு

வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழ்விடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா

வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா

பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா

வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா

பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே

எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபகழ் தேவியளே
காப்பெனக்குக் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்

ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று

ஏப்பம் மிக்விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்

ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே

காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு

சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே

அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர

தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
18
⁂
05
⁂
1927



உதிர்வு
29
⁂
02
⁂
2016



# அமரர் திருமதி சிறீகரன் பொன்னம்மா

தொல்புரம் கிழக்கு வின்னேஸ்வரா சனசமூக நிலையத்தின் ஆயுட்கால உறுப்பினரும், முன்னாள் கணக்காய்வாளரும், பிரேத ஊர்திப் பொறுப்பாளருமாகிய திரு. தம்பிமுத்து சிறீகரன் அவர்களின் அன்பு மனைவி பொன்னம்மா அவர்களின் திடீர் மரணமடைந்ததையிட்டு எமது நிலையம் மிகுந்த துயரடைந்து நிற்கின்றது.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய பூதராசி அம்மனையும் துரையன்வளவுப் பிள்ளையாரையும் வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!



பிரிவால் துயருறும்
**தொல்புரம் கிழக்கு**
**விக்கினேஸ்வரா சனசமூக நிலையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
18
⁂
05
⁂
1927



உதிர்வு
29
⁂
02
⁂
2016



## அமரர் திருமதி சிறீகரன் பொன்னம்மா

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தான பரிபாலன சபையின் முன்னாள் பொருளாளரும், தற்போதைய உப-தலைவருமாகிய திரு. தம்பிமுத்து சிறீகரன் அவர்களுடைய பாசமிகு பத்தினி பொன்னம்மா அவர்கள் இல்லறத்தை விட்டு திடீரென பிரிந்த செய்தி எம்மைத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

அன்னாரின் பிரிவு குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல தொல்புரம் - வழக்கம்பரை முத்துமாரியம்பாளை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



பிரிவால் துயருறும்
**பரிபாலன சபை**
**தொல்புரம் - வழக்கம்பரை**
**முத்துமாரியம்மன் தேவஸ்தானம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு


18

⁂

05

⁂

1927



உதிர்வு

29

⁂

02

⁂

2016



# அமரர் திருமதி சிறீகரன் பொன்னம்மா

தொல்புரம் மடத்தடிப்பிள்ளையார் சுப்பிரமணிய சுவாமி கோவில் பரிபாலன சபையின் ஆயுட்கால அங்கத்தவரும் முன்னாள் பரிபாலனசபை உறுப்பினருமாகிய சிறிதரன் அவர்களின் அன்பு மனைவி பொன்னம்மா அவர்களின் மறைவையொடம்டி மனம் வருந்துகின்றோம். மேலும் அன்னாரரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய விநாயகப்பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



பிரிவால் துயருறும்

**தொல்புரம் மடத்தடிப் பிள்ளையார் தர்மகர்த்தா சபையினர்**

**தொல்புரம் மடத்தடிப் பிள்ளையார் பரிபாலன சபையினர்**

**தொல்புரம் மடத்தடிப் பிள்ளையார் அன்னதான சபையினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன நிம்மதிக்கான வழிகள்

01. அன்பு மனம்
02. சிரித்த முகம்
03. நன்றி உணர்வு
04. நகைச்சுவை உணர்ச்சி
05. எதையும் தாங்கும் இதயம்
06. சுற்றுப்புறத் தூய்மை
07. ஆரோக்கியமான உடல்நலம்
08. பிறர்மனை நோக்காப் பேராண்மை
09. இன்சொல் பேசும் வாய்மை
10. நிலைக்குத் தகுந்த நினைப்பு
11. விட்டுத்தரும் மனப்பாங்கு
12. பிறர்கேடு சூழா எண்ணம்
13. இல்லறத்தில் ஈடுபாடு
14. நல்லதைத் தேடும் மனம்
15. சுயநல எதிர்பார்ப்பு இல்லா உழைப்பு

❖ **"பொறுமையாய் இரு எவரையும் வசப்படுத்திக் கொள்வாய்"**

❖ **"பகை கொள்ளாதே, நல்லதை நினை,
உன் வாழ்வில் நிம்மதி காண்பாய்"**

## வெற்றியின் இரகசியங்கள்

- அன்பு காட்டு, ஆனால் அடிமையாகி விடாதே.
- இரக்கம் காட்டு, ஆனால் ஏமாந்து போகாதே.
- பணிவாய் இரு, ஆகால் கோழையாய் இராதே.
- கண்டிப்பாய் இரு, ஆனால் கோபப்படாதே.
- சிக்கனமாய் இரு, ஆனால் கஞ்சனாய் இராதே.
- வீரனாய் இரு, ஆனால் துஸ்டனாய் இராதே.
- சுறுசுறுப்பாய் இரு, ஆனால் பதட்டப்படாதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்ப ஒளிவிளக்கு அணைந்த செய்தி கேட்டு உடன் வருகைதந்து வேண்டிய உதவிகள் புரிந்தவர்களுக்கும், நேரில் வருகைதந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு சிறப்பித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் அச்சிட்டு வெளியிட்டவர்களுக்கும், மரணச் செய்திகேட்டு வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபச் செய்திகளை தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் மற்றும் அந்தியேட்டி நிகழ்வுகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்வுகளிலும் கலந்துகொண்டவர்களுக்கும் இம்மலரை அச்சிட்டுத் தந்த சங்கானை திருமொழி அச்சகத்தாருக்கும், மற்றும் உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**நன்றி,**
**வணக்கம்**

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

இங்ஙனம்,
**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்

*இராசா
+
*ஆச்சிப்பிள்ளை

*கனகம்மா
+
*சிவசாமி

அன்னம்மா
+
*தியாகராசா

*பொன்னம்மா
+

*மாரிமுத்து

*சிவப்பிரகாசம்
+
இராஜேஸ்வரி

*

*தனேந்திரன்

*கேசவன்

நாகராஜன்
+
ஞானதர்சினி

சஜூஜென்
சிபிலன்
கிஷான்
(கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்ஷம்

*தம்பிமுத்து
+
*சின்னம்மா

சிறீகரன்
+

*சிவப்பிரகாசம்
+
இராஜேஸ்வரி

சரஸ்வதி
(மலேசியா)
+
*எதிர்மனசிங்கம்

செல்வநாயகம்
+
இராஜேஸ்வரி

ன்

நாகராஜன்
+
ஞானதர்சினி

சறூஜென்
சிபிலன்
கிஷான்
(கனடா)

குகனேசன்
+
நிறஞ்சலா

தக்சி
டனிசி
(கனடா)

கிரிஜா
+
சிவயோகலிங்கம்

துஷானி

* இக்குறி அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டுவந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகின்றது.
மற்றொருநாள் அது
வேறொருவருடையதாகின்றது.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org